அ.வ.எண்: 96/2017 நாள்: 04.11.2025

வா.சா.1 – கருப்பையா

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.4 ஆவணத்தில் நான் கிரயம் பெற்றதாக சொல்லும் பூசத்துறை என்பவர் 10 வயதிலேயே வீட்டை விட்டு ஓடி விட்டார் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் பூசத்துறை என்பவரிடமிருந்து கிரயம் பெற்ற கிரையம் பத்திரத்தில் என்னுடைய அடையாள அட்டையோ அல்லது பூசத்துறை என்பவரின் அடையாள அட்டையோ மேற்படி ஆவணத்தில் இணைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் எனக்கு பாத்தியம் என்பதை நிரூபணம் செய்யாமல் தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்து கட்டளை கோருவது நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்திற்கும் தற்போது வரை என் பெயரிலும் பிரதிவாதிகளின் தகப்பனாரான முத்தையா பெயரிலும் பூசத்துரை என்பவர் பெயரிலும் கூட்டு பட்டாவாக தான் உள்ளது என்றால் சரிதான். அதனால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u> இல்லை.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.11.04 16:10:17 +0530